# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# ஞானமான சாலொமோன் ராஜா

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Lazarus

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

தாவீது ராஜா ஒரு பெரிய தேவனுடைய மனிதன். அவனுடைய ஆட்சியில் இஸ்ரவேல் தேசமானது சவுல் ஆட்சி செய்ததைவிட பத்து மடங்கு அதிகமாயிற்று. ஆனால் இப்போதோ அவனால் ஆட்சி செய்ய முடியவில்லை.



தாவீது முதிர்வயதுள்ளவனான், மற்றும் பலவீனனானான்! வியாதியுள்ளவனானான்! பூமியிலே அவனுடைய வாழ்க்கை முடிவுக்கு வரப்போகிறது.





தாவீதின் பல
குமாரர்களில்
ஒருவனான,
அதோனியா, தான்
ராஜாவாகப் போகிறேன்
என்று ஜனங்களிடம்
சொன்னான்.
அவனுடைய பெயர்
"என்னுடைய
ஆண்டவர் தேவன்"
என்று அர்த்தங்
கொண்டாலும்,
அதோனியா நல்ல
மனிதனல்ல.



தாவீது
பலவீனனாயிருப்பதினாலே
தன்னை எதிர்க்க முடியாது
என்று எண்ணி,
சிங்காசனத்தை
தன் வசப்படுத்த
நினைத்தான். ஆனால்
தேவனிடமோ வேறே
திட்டங்கள் இருந்தன!

தாவீதின் மனைவி பத்சேபாளுக்கு சாலொமோன் தான் ராஜாவாவான் என்று தெரியும். அதோனியாவின் திட்டத்தை அவள் தாவீதிடம் தெரிவித்தாள். வியாதியிலே இருந்தாலும், தாவீது தன்னுடைய தலைவர்களை கூட்டி சாலொமோனை ராஜா என்று பகிரங்கமாக அறிவித்தான்.



சாலொமோனுக்கு இப்போது அதோனியாவிடமிருந்து எந்த தொல்லையும் இல்லை ஏனெனில் ஜனங்கள் தாவீதை நம்பினார்கள். தேவன் சாலொமோனை ராஜாவாக தெரிந்தெடுத்திருக்கிறார் என்று தாவீது சொன்னான். சில நாட்களுக்குப்பின், தாவீது மரித்துப் போனான்.





தாவீது மரிப்பதற்கு முன் அவன் சாலொமோனிடத்தில் தேவனுக்கு கீழ்ப்படிவது பற்றியும், நல்ல ராஜாவாக இருப்பது குறித்தும் பேசினான். "தேவனுடைய வழியில் நட, நீ செய்வதெல்லாம் வாய்க்கும்," என்று தாவீது தன் மகனிடன் சொன்னான். அது ஒரு நல்ல அறிவுறை! பின்பு சாலொமோன் தாவீதுடைய சிங்காசனத்தில் அமர்ந்தான், அவனுடைய ராஜ்ஜியம் நன்றாக ஸ்திரப்பட்டது.

ஒரு இரவிலே, சாலொமோன் சொப்பனம் ஒன்று கண்டான். சொப்பனத்திலே, தேவன் அவனுக்குத் தரிசனமாகி சொன்னது, "கேள்! நான் உனக்கு என்ன தர வேண்டும்?" நீங்கள் என்ன கேட்டிருப்பீர்கள்?



நல்ல ராஜாவாயிருப்பதற்கு சாலொமோன் ஞானம் கேட்டான். அந்த இளமையான ராஜாவின் கோரிக்கை தேவனுக்குப் பிடித்திருந்தது.



சாலொமோன் கேட்டதைப் பெற்றுக்கொண்டான் - ஆனால் தேவன் அவனுக்கு ஐஸ்வரியத்தையும், கனத்தையும் கொடுப்பேன் என்று வாக்குப்பண்ணினார்.





சாலொமோனின் ஞானத்தைக் கண்டுப்பிடிக்க ஜனங்களுக்கு அதிக நாட்கள் தேவைப்படவில்லை. ஒரு நாள், இரண்டு தாய்மார்கள், ஒரு குழந்தையுடன் அவன் முன் வந்தார்கள். "இந்த பெண்ணின் மகன் இரவு இறந்து போனான், ஆனால் இவளோ தன்னுடைய செத்தக் குழந்தையை என்னுடைய உயிருள்ள குழந்தையுடன் மாற்றிக்கொண்டாள்," என்று ஒரு பெண் சொன்னாள்.



"இல்லை! உயிரோடிருப்பது
என்னுடைய குழந்தை,
இறந்தது உன்னுடைய
குழந்தை," என்று அடுத்தப்
பெண் சொன்னாள். எந்த தாய்
உண்மையானவள் என்று
ராஜா எப்படி சொல்லமுடியும்?

"ஒரு பட்டயத்தை கொண்டு வாருங்கள்" என்று ராஜா சொன்னான்.  அவனிடத்தில் ஒரு பட்டயத்தைக் கொண்டு வந்தார்கள்.  ராஜா பட்டயத்தைக் கொண்டு என்ன செய்ய திட்டமிட்டிருக்கிறாறென்று யோசிக்கிறீர்கள்?



"உயிருள்ள குழந்தையை இரண்டாக வெட்டி ஒரு பாதியை ஒருவருக்கும் மறு பாதியை மற்றொருவருக்கும் கொடுங்கள்" என்று ராஜா சொன்னான். உயிருள்ள குழந்தையின் தாய் அப்போது சொன்னாள், "ஆண்டவனே, உயிருள்ள குழந்தையை அவளிடம் கொடுத்துவிடுங்கள்

அதைக் கொல்ல
வேண்டாம்."



ஆனால் அடுத்த தாயோ, "அந்தக் குழந்தை எனக்கும் வேண்டாம், அவளுக்கும் வேண்டாம் வெட்டிப்போடுங்கள்." என்றாள்.





அப்போது ராஜா சொன்னான்,
"குழந்தையை முதல் பெண்ணிடம்
கொடுங்கள். அவள் தான் தாய்."
இஸ்ரவேலர் எல்லோரும்
நியாயத்தீர்ப்பை கேட்டபோது,
ராஜாவை அதிகமாக மதிக்க
தொடங்கினார்கள். தேவனுடைய
ஞானம் அவனிடத்திலிருக்கிறது
என்று அவர்கள் கண்டார்கள்.

இஸ்ரவேல் மக்கள் தேவனை
வழிபட ஆலயமில்லாதிருந்தது,
தாவீது கட்டத்திட்டமிட்டபோது,
"உன்னுடைய மகன் எனக்கு
ஒரு வீட்டைக்கட்டுவான்,"
என்று தேவன் சொன்னார்.



ஆகையால்
சாலொமோன்
தேவனுக்காக ஒரு அழகான
ஆலயத்தை எருசலேமில்
கட்டத்தொடங்கினான்.

அதை கட்டி
முடிக்க ஏழு நீண்ட
வருடங்களாயிற்று.



சாலொமோன்
அந்த ஆலயத்தை
பிரதிஷ்டைப் பண்ண
வேண்டிய அந்தப் பெரிய
நாள் வந்தபோது ஜனங்கள்
எல்லோரும் கூடிவந்தார்கள்.

ஒரு அழகான விண்ணப்பம் பண்ணினபின்பு, ராஜாவும், மக்களும் மிகுந்த சந்தோஷத்துடன் ஆயிரக்கணக்கான பலிகளை செலுத்தி



இரண்டு வாரத்திற்கு அற்புதமாக பண்டிகையை கொண்டாடினார்கள்!



பின்பு, தேவன்
சாலொமோனுக்கு
மறுபடியும் தரிசனமாகி
அவனும், இஸ்ரவேல்
ஜனங்களும் அவருக்கு
கீழ்ப்படியும் நாட்களெல்லாம்
ஆசிர்வதிப்பதாக
வாக்குப்பண்ணினார்.



துக்கமென்னவென்றால், சாலொமோனோ, அல்லது இஸ்ரவேல் ஜனங்களோ எப்போதும் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை. ராஜா அனேக பெண்களை திருமணம் செய்தான். ஆனால் தேவன் வேண்டாமென்று நினைத்த பெண்களை திருமணம் பண்ணினான்.



அவனுடைய அந்நிய பெண்கள் அவனுடைய இருதயத்தை விக்கிரகங்களுக்கு நேராக திருப்பினார்கள்; மற்றும் அவனுடைய தந்தையாகிய தாவீதின் இருதயத்தைப் போல் அவனுடைய இருதயம் கர்த்தருக்கென்று நேர்மையாக இருக்கவில்லை.



இப்படி சாலொமோன் தேவனுக்கு கீழ்ப்படிகிற தருணங்களை வீணடித்தபோது, அவனுடைய அதிகாரிகளில் ஒருவனான யெரோபெயாம் விசித்திரமான அனுபவம் பெற்றான். தீர்க்கதரிசி ஒருவன் அவனிடம் தேவன் சாலொமோனின் ராஜ்ஜியத்தை இரண்டாக பிரிப்பார் மற்றும் யெரோபெயாம் பத்து கோத்திரங்களை ஆட்சி செய்வான் என்றும் சொன்னான்.



யெரோபெயாம் உடனே எகிப்திற்குச் தப்பிச்சென்றான்.
ஒருவேளை அவன் அங்கேயிருந்தால் சாலொமோன்
தன்னை கொன்றுபோடுவான்
என்று நினைத்தான்.





கடைசியாக சாலொமோன் மரித்துப்போனான். அவனுடைய குமாரன், ரெகோபெயாம், சாலொமோனைவிட அதிகமாக ஜனங்களுக்கு வரியை விதித்தான். பத்து கோத்திரங்கள் கலகம் பண்ணி யெரோபெயாமை தங்களுடைய தலைவனாக தெரிந்தெடுத்தார்கள்.



தேவனுடைய தீர்க்கதரிசி சொன்ன பிரகாரமாக, சாலொமோனின் ராஜ்ஜியம் இரண்டாக பிரிந்தது. தேவன் கீழ்ப்படியாமையை ஆசீர்வதிக்க மாட்டார்.

ஞானமான சாலொமோன் ராஜா

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

1 இராஜாக்கள் 1-12

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

22

60

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16